
# திராவிடத்தால் வாழ்கிறோம்

980

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

31

# ‘ரங்கோன் ராதா’
# பேராசை நோயை நீக்கும் மருந்து!



திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

**“பேசும் பொற்சித்திரத்தை -**
**பெண்கள் குல திலகத்தை**
**பேயாக்கி மகிழும் பித்தனின் வெறி விளையாட்டு!**
**பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டில்**
**மண்ணடிமை தீர்வதில்லை என்ற பாடம் போதிக்கும்**
**அறிஞர் அண்ணாவின் பொன்னோவியம்.”**

என்கிற வரிகளோடு விளம்பரம் செய்யப்பட்ட திரைப்படம் **ரங்கோன் ராதா**. 1956 -ஆம் ஆண்டு திரைக்கு வந்தது.

அறிஞர் அண்ணாவின் கதைக்கு, கலைஞர் வசனம் எழுதி, மேகலா பிக்சர்ஸ் தயாரிப்பில், ஏ.காசிலிங்கம் இயக்கத்தில், சிவாஜி, பானுமதி, எம்.என்.ராஜம், எஸ்.எஸ்.ஆர், ராஜசுலோசனா, பி.எஸ்.ஞானம் ஆகியோர் நடித்திருந்தனர். நடிகர்திலகம் சிவாஜி கணேசன் எதிர்மறைக் கதாநாயகன் தர்மலிங்க முதலியாராகத் தோன்றி, சிறப்பாக நடித்த படம்.

பணத்தாசையால், தனது மனைவி ரங்கம் (பானுமதி) மனநலம் பாதிக்கப்பட்டவர் என ஒதுக்கி வைத்துவிட்டு, மனைவியின் தங்கை தங்கத்தை (எம்.என்.ராஜம்) இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்வதன் மூலம் மாமனார் வீரராகவ முதலியாரின் சொத்து முழுவதும் வெளியே சென்றுவிடாமல், அனைத்தையும் தமதாக்கிக்கொள்கிறார், தர்மலிங்க முதலியார். அவரது பணத்தாசையைப் போலவே தங்கத்தின் பொறாமை மற்றும் பொன் நகை, சுகபோக வாழ்க்கை மீதான ஆசை, தனது அக்காளுக்குத் துரோகம் செய்து, அவளுக்கு வேசிப் பட்டம் கட்டிவிட்டு, தர்மலிங்கம் முதலியாருக்கு இரண்டாவது மனைவியாகச் செய்கிறது. இந்த இருவரின் பேராசையால் ரங்கத்தின் வாழ்க்கையும் மகிழ்ச்சியும் சூறையாடப்படுகின்றன.

### கதைச் சுருக்கம்

தர்மலிங்கம் முதலியார் கோட்டையூரில் மிகப்பெரிய பணக்காரர். இலங்கைக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் வணிகர், நாட்டாமைக்காரர். தனது மனைவி ரங்கத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவருகிறார். அவரது மாமனாருடைய சொத்துவழக்கில் வெற்றிபெற்று சொத்துகள் திரும்பக் கிடைத்துவிடுகின்றன. அச்சொத்தில் பாதி, ரங்கத்தின் மூலமாகத் தனக்கும் மீதி, தங்கத்தைத் திருமணம் செய்பவருக்கும் போய்விடுமே என்று கருதும் தர்மலிங்கம், தங்கத்துக்கு செவ்வாய் தோசம் என்று பெண் கேட்டு வருபவரிடம் பொய் சொல்லித் திருப்பி அனுப்புகிறார்.

ரங்கோனுக்குச் செல்லும் ரங்கம், அங்கு வைத்தியர் தொழில் செய்யும் நாயுடுவைச் (கலைவாணர் என்.எஸ்.கே.) சந்திக்கிறாள். தமிழ்நாட்டில் பேய் விரட்டும் பூசாரியாக இருந்தவர், ரங்கோனில் நோய் விரட்டும் வைத்தியராக இருக்கிறார். அவரது மனைவி ஒரு பெண் குழந்தையைப் பெற்றுவிட்டு இறந்துவிட, அக்குழந்தையை ரங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு, சிறிது காலத்தில் அவரும் இறந்துபோகிறார்.

### 20 ஆண்டுகளுக்குப் பின்னர்

20 ஆண்டுகள் கழிகின்றன. இரண்டாம் உலகப்போர், ஜப்பான் குண்டுவீச்சுக்குப் பயந்து ரங்கோனில் இருந்து ரங்கமும் அவளது வளர்ப்புப் பெண் ராதாவும் தாயகம் திரும்புகின்றனர். தர்மலிங்கத்தின் மகன் நாகசுந்தரம் (எஸ்.எஸ்.ஆர்.) வாலிபனாகி சமூக சேவையில் ஈடுபடுகிறான். ஒரு நாள், தஞ்சாவூரில் ராதா (ராஜசுலோசனா) வைச் சந்திக்கிறான். அவள், ரங்கத்தை அவனுக்கு அறிமுகம் செய்துவைக்கிறாள். இருவரும் பேசும்போது, நாகசுந்தரம் தான் தனது மகன் என்பதை ரங்கம் அறிந்துகொண்டு, நடந்தவற்றை எல்லாம் தனது மகனிடம் சொல்கிறாள். தனது கணவன் எழுதிக்கொடுத்த உயிலையும் காட்டுகிறாள். தனது தாய்க்கு நடந்த கொடுமைகளைக் கேட்டு கோபம் கொள்ளும் நாகசுந்தரம், தனது தந்தைக்குப் புத்தி புகட்டுகிறேன் என்று சொல்லிவிட்டு, கோட்டையூர் வீட்டுக்கு வருகிறான்.

வீட்டில் தர்மலிங்கம் ஊர்ப் பெரிய மனிதர்கள் முன் தனது மகனுக்குத் திருமணம் செய்ய நாள் குறித்துக்கொண்டிருக்கிறார். அனைவரையும் கேலிசெய்து விரட்டிவிடும் நாகசுந்தரம், தர்மலிங்கத்திடம் கடந்த காலத்தில் தனது தாய்க்குச் செய்த கொடுமைகள் பற்றிக் கேட்கிறான். தனது தாயைச் சந்தித்தது பற்றியும், தர்மலிங்கம் 20 ஆண்டுகளுக்கு முன் ரங்கத்திடம் எழுதிக்கொடுத்த வாக்குமூலம் மற்றும் உயில் பற்றியும் சொல்கிறான். இதனை மறைந்து இருந்து கேட்டுக் கொண்டிருக்கும் தங்கம், ரங்கம் தங்கி இருக்கும் வீட்டுக்குச் சென்று கடிதத்தையும் உயிலையும் திருடிக்கொண்டு வந்துவிடுகிறாள்.

மேலும் வக்கீலை வரவழைத்து, தனக்குப் பிறந்த மகன் பரமன் பெயரில், சொத்துகள் அனைத்தையும் எழுதிவைத்துவிட வேண்டும், நாகசுந்தரத்தை வீட்டை விட்டு விரட்ட வேண்டும், இல்லாவிட்டால் துளசியைக் கொலை செய்ததை போலீசில் சொல்லிவிடுவேன் என்று தர்மலிங்கத்தை மிரட்டுகிறாள். அவள் சொல்படியே தர்மலிங்கம் வக்கீலை வரவழைத்து உயில் எழுதச் சொல்கிறார். அப்போது, அங்கு ஊர் மக்களையும் அழைத்துக்கொண்டு நாகசுந்தரம், ராதா, ரங்கம் அனைவரும் வந்துவிடுகின்றனர். இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த உண்மைகளை, ஊரார் முன் எடுத்தும் சொல்கின்றனர்.

ஆனால், தனது அக்காள் ரங்கம் இறந்துவிட்டாள். இவள் யாரோ ஏமாற்றுக்காரி என்று தங்கம் சொல்கிறாள். அப்போது, அவளது மகன் பரமன், தர்மலிங்கம் எழுதிக்கொடுத்த உயில் மற்றும் கடிதத்தைக் கொண்டுவந்து ஊரார் முன் ஒப்படைக்கிறான். அதனைப் பார்த்த ஊரார், தர்மலிங்கத்தை மோசக்காரன் என்று சொல்லித் தாக்குகின்றனர். ரங்கம் அவர்களைத் தடுத்து, தனது கணவனைக் காப்பாற்றுகிறாள். தர்மலிங்கம் மனம் திருந்தி மன்னிப்பு கேட்கிறார். தங்கமும் மனம் திருந்தி மன்னிப்பு கேட்கிறாள்.

நாகசுந்தரத்திற்கும் ராதாவுக்கும் திருமணம் நடைபெறுவதுடன், படம் நிறைவடைகிறது. இதுவே படத்தின் கதை.

இதனைக் கண்டு கோபம் கொள்ளும் ரங்கத்திடம், தங்கத்தைத் தானே திருமணம் செய்யப் போவதாகக் கூறுகிறார். கோபம் கொள்ளும் தனது மனைவி ரங்கத்திற்குப் பேய் பிடித்துவிட்டதாகக் கதை கட்டி, பூசாரி புண்ணியகோடியை (கலைவாணர் என்.எஸ்.கே.) அழைத்து, பேய் விரட்ட ஏற்பாடு செய்கிறார். வெளியூர் கோயிலுக்குச் சென்று தங்கி வழிபட்டால், ரங்கத்தின் தோஷம் தீரும் என்று அனுப்பி வைத்துவிட்டு, தங்கத்தைத் திருமணம் செய்துகொள்கிறார்.

ரங்கம் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுக்கொண்டு கணவன் வீட்டுக்கு வருகிறாள். தர்மலிங்கம் ரங்கத்தை நிரந்தரமாக விரட்ட ஒரு மந்திரவாதியை அழைத்து வருகிறார். ஆனால், அந்த மந்திரவாதி தர்மலிங்கத்தின் கண்களைக் கட்டி, பூசையில் அமரவைத்துவிட்டு, வேலைக்காரி துளசியைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்து, அக்கொலையைத் தர்மலிங்கம் செய்ததாகச் சொல்லி மிரட்டி, வீட்டுப் பெட்டிச் சாவியைப் பறித்துப் பொன்னையும் பொருளையும் கொள்ளையடிக்க முற்படுகிறான்.

அப்போது அங்கு வரும் ரங்கம், பூசாரியைக் கட்டையால் தாக்கி, தர்மலிங்கத்தைக் காப்பாற்றுவதுடன் துளசி கொலைப் பழியில் இருந்தும் தர்மலிங்கத்தைக் காப்பாற்ற வழி சொல்கிறாள். அதாவது, ரங்கம் கொடிய அம்மை நோய் கண்டு இறந்துவிட்டாள், அவளது முகத்தை யாரும் பார்க்கக் கூடாது என்று சொல்லி, கொலை செய்யப்பட்ட வேலைக்காரி துளசியின் பிணத்தைத் துணியால் மூடி எரித்துவிடச் செய்கிறாள். அத்துடன், நடந்தவற்றை எல்லாம் தர்மலிங்கத்திடம் எழுதி வாங்கிக்கொண்டு, தனது மகனை தர்மலிங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு, அவனுக்கு யாதொரு தீங்கும் வரக் கூடாது என்று கூறி, அவன் பெயருக்கு சொத்துகளையும் உயில் எழுதி வாங்கிக்கொண்டு, யாருக்கும் தெரியாமல் சாமியார் வேடத்தில் ரங்கம் ஊரை விட்டுப் போகிறாள்.



> **அவளது மகன் பரமன், தர்மலிங்கம் எழுதிக்கொடுத்த உயில் மற்றும் கடிதத்தைக் கொண்டுவந்து ஊரார் முன் ஒப்படைக்கிறான்.**

...காட்சி விரியும்

## கொடுத்து வைத்தவர்கள் நாம்!

திராவிட மாடல் அரசின் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் சர்வதேச தரத்தில் நவீன தன்மையுடன் வியப்பளிப்பவை. திருச்சி, பஞ்சப்பூர் பேருந்து நிலையம் குறித்த தனது அனுபவத்தை முகநூலில் பகிர்ந்துள்ளார், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கத்தின் பெண் படைப்பாளி பா.மகாலட்சுமி. அவரது பதிவிலிருந்து...

“பஞ்சப்பூரில் அமைந்த புதிய பேருந்து நிலையத்தைக் கண்டவுடன் கொஞ்சம் மகிழ்ச்சியுடன் வேடிக்கை பார்த்துக்கொண்டே உள்நுழைந்தேன், புதிய உருவாக்கத்தில் எது ஒன்றும் நவீன அமைப்புகளுடன் உருவாக்கப்படுவது, அரசின் செயல்பாடுகளில் ஒன்றுதான் என்றாலும், நான் கண்டு மகிழ்ந்த காட்சி மட்டுமே இந்தப் பேருந்து நிலையத்தின் வெற்றி எனச் சொல்லலாம்.

ஒரு விமான நிலையத்தில் நுழைவதான உணர்வுதான். எளிய மக்கள் ஆச்சர்யத்துடன் கட்டட அமைப்பை வேடிக்கை பார்ப்பதும், ஒவ்வொரு நிறுத்த அரங்கிலும் பேருந்தின் நேரம் காண்பிக்கும் ஸ்க்ரீன் முன்பு அழகான இருக்கைகளில் பயணிகள் அமர்ந்தும் இருந்ததை ரசித்தேன், எளியவர்களும் சேர்ந்து அனுபவிக்கும் ஒரு நவீன கட்டடம் எனக்கென்னமோ கூடுதல் அழகாகத் தெரிந்தது.

எந்நேரமும் சுத்தப்படுத்தும் வேலைகளில் தூய்மைப் பணியாளர்கள் இயங்குகிறார்கள், ஒரு இடத்தில்கூட குப்பைகள் இல்லை.

நகரைவிட்டு கொஞ்சம் தூரமாக இருக்கிறது என்கிற விமர்சனங்களையும் கேட்க நேர்ந்தது உண்மை. இவ்வளவு பெரிய பேருந்து நிலையத்தை நகரத்துக்குள் அமைக்க வாய்ப்பில்லைதான். நகர வளர்ச்சியில் சில சங்கடங்கள் இருந்தாலும், நவீன வளர்ச்சி என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இவற்றைப் பார்த்துக்கொண்டே பேருந்தில் ஏறி பயணித்துக்கொண்டே நினைவுகள் பின்னோக்கி பால்யத்தில் நுழைந்தன. எத்தனை எத்தனை மாற்றங்கள், விஞ்ஞானத்தின் முன்னேற்றம், கண்டுபிடிப்புகள். என் தலைமுறை ஆட்கள் கொஞ்சம் கொடுத்து வைத்தவர்கள்தான்” என்கிறது அந்தப் பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### கழகத்தில் இணைந்த முன்னாள் சபாநாயகர் காளிமுத்து!



பாவலர் மா.மாடசாமி

1994 ஆம் ஆண்டு, விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்ட கழகக் கூட்டம் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில், முன்னாள் சபாநாயகரும், முன்னாள் அமைச்சருமான காளிமுத்து அவர்கள் அ.தி.மு.க.வில் இருந்து விலகி, கழகத்தில் இணைந்தார். தனது உரையில், ‘டாக்டர் கலைஞரின் தம்பியாக இருப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்’ எனக் குறிப்பிட்டார். தலைவர் பேச்சைக் கேட்பதற்காக வந்த நான், நிகழ்ச்சி மேடையில், சிவகாசி நகரக் கழக நிர்வாகிகளுடன் நின்றிருந்தேன். அப்போது எடுக்கப்பட்ட படம்.

**– பாவலர் மா.மாடசாமி, முன்னாள் பேரூர் செயலாளர், சுந்தரபாண்டியம், விருதுநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ராஜாஜி அளித்த ஆதரவு!

1964-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது ராஜாஜி அவர்கள் கழகத்துக்கு ஆதரவு அளித்தார். கழகத்துடன் ராஜாஜிக்கு நெருக்கமான நட்பு ஏற்பட்டது. 1937-38-ஆம் ஆண்டில், இந்தியை தமிழ்நாட்டில் நுழைப்பதற்கு முயன்ற ராஜாஜி அவர்களே, 1965 ஆம் ஆண்டில், “இந்தி வெறியர்களின் போக்கைப் பார்க்க எனது மூளையில்கூட பிரிவினை எண்ணம் வந்துவிட்டது”என்று கூறினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131